23.01.2025 O.S 233 of 2022 வா.சா.1 செல்வி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

ஆரம்பத்தில் திருமலையம்மாள், கிருஷ்ணன் ஆகியோர்கள் சேர்ந்து தான் 6செண்டினை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் தான் அவர்களுக்கு ஆதிதிராவிட நலத்துறையில் இருந்து பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தனிதனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது. 6செண்டிற்கு மேல்பட்டா வழங்ககூடாது என்பதற்காக பட்டா எண்.46 கிருஷ்ணன், திருமலையம்மாள் பெயரிலும், பட்டா எண் 41 கிருஷ்ணம்மாள், கோபால் என்பவர்கள் பெயரிலும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தனிதனியாக வழங்கப்பட்டுள்ளது. மொத்த சொத்தையும் கிருஷ்ணன், திருமலையம்மாள் தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 1991ல் எங்களது குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினையின் கீழ் தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 253 மனை எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை 1ம்பிரதிவாதி தான் உரிமையாளராக இருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதி தான் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. என் தாத்தா கிருஷ்ணன் என்பவருக்கு திருமலையம்மாள், பண்டாரத்தி என்று இரண்டு மனைவிகள் என்றால் அது எனக்கு தெரியாது. கிருஷ்ணன், திருமலையம்மாளுக்கு கோபால், இசக்கியம்மாள், கருப்பம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். கருப்பம்மாள் எனது அம்மா ஆவார். பண்டாரத்தி என்பவருக்கு சுப்பையா என்ற மகன் உண்டு என்றால் அது எனக்கு தெரியாது. அவர் இறந்து விட்டார் என்றாலும் அவரது வாரிசுகள் அன்பு, சுகுமார், கவிதா, சுதாகர் ஆகியோர்கள் உண்டு என்றாலும் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

கருப்பம்மாளுக்கு ஆறுமுகம், மாணிக்கம் மற்றும் நான் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். ஆறுமுகம், மாணிக்கம் தற்போதும் உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மனை எண்.259ஐ இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சேர்க்க வேண்டும் என்றால் சரியல்ல. பகுதி பாகபிரிவினையின் கீழ் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. 1ம்வாதியின் சகோதரரை தான் 1ம் பிரதிவாதி இசக்கியம்மாள் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 1ம்பிரதிவாதியின் கணவருக்கு வாய்பேசமுடியாது என்றால் சரிதான். 1ம் வாதி கிருஷ்ணம்மாள் 1ம் பிரதிவாதி கணவர் மீது பாகபிரிவினை கோரி அ.வ.எண்.59/22 என மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தென்காசியில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர்களுக்குள் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை தான் அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சுப்பையாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் வீடு கட்ட முயற்சி செய்த போது அதில் 1ம்வாதி கிருஷ்ணம்மாள் பாகம் கேட்டார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதியின் கணவர் கொடுக்க மறுத்ததால் தான் நாங்கள் வேண்டுமென்றே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கடையநல்லூர் வேதகோவில் தெருவில் கதவு எண் 34பி என்ற வீடு 1ம் வாதிக்கு தான் ஒதுக்கப்பட்டு வந்து அதில் அவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அது எங்களது அத்தைக்கு கொடுக்கப்பட்டது. பிச்சையா, கருப்பையா ஆகியோர்களுக்கு கிடைத்த பாக சொத்தில் தான் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எத்தனை செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் ஒரு சொத்திற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மொத்தம் 6 செண்ட் என்றாலும் சரியல்ல. மொத்தம் 3 செண்ட் தான். நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி ஜாபிதா தவறானது என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள பட்டா எண் 46ஐ நான் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. ஏற்கனவே பாகம் பிரிதது அனுபவம் செய்து வரும்நிலையில் மீண்டும் பாக பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத காரணத்தினால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான் அனுபவத்தில் இல்லாத நிலையில் நான் கட்டியுள்ள நீதிமன்ற முத்திரை கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.